மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# முரசொலி

பக்கங்கள் நான்கு — விலை ரூபா 5.00

முரசு 06 ஒலி 106 பிரசோற்பத்தி மாசி 29 ( 12 . 03 1992 ) வியாழன்

## ராஜீவ் கொலை கஸட்டில் மாற்றம் செய்யவில்லையாம்!

ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்டபோது அங்கு படம் பிடிக்கப்பட்ட வீடியோ கஸட்டில் எந்த தில்லுமுல்லும் செய்யப்படவில்லை என நேற்று பாராளுமன்றத்தில் இந்திய உள்துறை அமைச்சர் எஸ். பீ. சவான் தெரிவித்தார் கொலையை நேரடியாக படம் பிடித்த வீடியோ கஸட்டில் சில மாற்றங்கள் செய்யப்படுவதாக கூறப்படுவதை மறுத்த சவான், அதற்கான சான்று எதுவுமே கஸட்டில் காணப்படவில்லை என்றார் ஆயினும் இதுதொடர்பாக நிபுணர்கள் கஸட்டை இப்போது ஆராய்ந்து வருவதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# இரத்மலானை விமானத்தளத்தில் இரு குண்டுகள் வெடித்தன!

## சீனத்தயாரிப்பு விமானம் நாசம்; இராணுவத்தரப்பு மறுக்கிறது

கொழும்பின் தெற்குப்பகுதியில் நேற்றுக்காலை வெடித்த இரு வெடிகுண்டுகள் இரத்மலானை விமானத்தளத்தில் வெடித்ததாக தெரிவிக்கப்படுகிறது. இந்த குண்டுவெடிப்பினால் ஸ்ரீலங்கா விமானப்படைக்குச் சொந்தமான விமானம் ஒன்று நாசமானது என கொழும்பில் செய்திகள் அடிபடுவதாக வெரித்தாஸ் வானொலி நேற்று அறிவித்தது.

நேற்றுக்காலை இரத்மலானை பகுதியில் அடுத்தடுத்து இரு குண்டுகள் பாரிய சத்தத்துடன் வெடித்தன.

### நகர் ஸ்தம்பிதம்

இக்குண்டு வெடிப்புச் சத்தம் கொழும்பு நகரையே உலுக்கியதாகவும் இதனால் பீதியுற்ற மக்கள் பாதுகாப்பான இடங்களை தேடிக் கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது இதனால் நகர் காலையில் சிறிது நேரம் ஸ்தம்பித்திருந்தது.

### தளத்தில் வெடித்தது

இரத்மலானை விமான தளத்தில் நிறுத்தப்பட்டிருந்தசீனத்தயாரிப்பு விமானப் படை விமானம் ஒன்றில் இக்குண்டு வெடிப்பு நிகழ்ந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

### கோளாறாகுண்டுவெடிப்பா?

விமானப்படையின் சீனரக விமானத்தில் ஏற்பட்ட கோளாறினால் விமானம் தீப்பற்றி வெடித்ததா அல்லது விமானத்தில் குண்டுகள் ஏற்றப்படும் போது அவை தவறுதலாக வெடித்து விமானம் சிதறியதா என்பது

—04 ஆம் பக்கம் பார்க்க

## வீரச்சாவு

ஆனையிறவு தட்டுவன் கொட்டிப் பகுதியில் நடைபெற்ற தாக்குதலில் புலிகள் தரப்பில் லெப். டேவிட் கப்டன் ஸ்ரீசங்கர் ஆகியபோராளிகள் வீரச்சாவு ஏய்தினர்

## லொறிகள் சென்றன

கீரிமலை - சேந்தாங்குளம் பாதையூடாகநேற்றும் 8லொறிகள் காங்கேசன் துறைமுக களஞ்சியத்துக்குச் சென்று உணவுப் பொருள்களை ஏற்றிக் கொண்டு யாழ்ப்பாணம் திரும்பின

... 04 ஆம் பக்கம் பார்க்க

## பூநகரி படையினர் அதிகாலை ஷெல் தாக்குதல்

பூநகரி - கல்முனை பகுதியில் நிலைகொண்டிருக்கும் இராணுவத்தினர் நேற்று அதிகாலை 3 மணி தொடக்கம் ஆனையிறவுப் பகுதியில் கடும் ஷெல்தாக்குதலை மேற்கொண்டனர்.

சுமார் இரண்டு மணி நேரமாக இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது கடலில் இருந்து பிரங்கித்தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டது:

ஹெலி ஒன்றும் இப்பகுதியை வட்டமிட்டு கலிபர் தாக்குதலை மேற்கொண்டது 47

## யாழ். நகரில் நேற்று மாணவரின் சைக்கிள்பேரணி

1991 க பொ. த உயர்தர பரீசையை நடத்தும் திகதியை உத்தியோகபூர்வமாக அறிவிக்கக் கோரி யாழ் நகரில் மாபெரும் சைக்கிள் பேரணி நடத்தப்பட்டது.

பெரும் தொகையான மாணவர்களும் மாணவிகளும் இதில் கலந்து கொண்டனர்.

முக்கிய வீதிகளூடாக சென்ற இப்பேரணி யாழ். செயலகத்தையடைந்து அரச அதிபரிடம் மகஜர் ஒன்றைக் கையளித்தது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடமும் மகஜர் கையளிக்கப்பட்டது

(04. 47, 07)

## பொலிஸ் தலைமையகம் நேற்றிரவு அறிவிப்பு

# புலிகளின் தாக்குதல் அணி கொழும்பில் நுழைந்துவிட்டதாம்

விடுதலைப்புலிகளின் தாக்குதல் அணியொன்று கொழும்பு நகரில் நுழைந்துள்ளதாக பொலிஸ் தலைமையகத்தை மேற்கோள்காட்டி இலங்கை வானொலி நேற்றிரவு அறிவித்தது

இந்த தாக்குதல் அணியில் அங்கம் வகிக்கும் பெண்மணியொருவரின் தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது

தர்மதேவி அல்லது தேவி அக்கா என அழைக்கப்படும் 32வயதான இவர் ஏறாவூரைச் சேர்ந்தவர் என தகவல்கள் கிடைத்துள்ளதாக பொலிஸ தலைமையகம் தெரிவித்தது.

## கடலிலிருந்தும், வானிலிருந்தும் ஆனையிறவு பகுதியில் குண்டுவீச்சு, ஆட்லறி தாக்கு

ஆனையிறவு தட்டுவன் கொட்டி காவலரண்கள் தகர்க்கப்பட்டதைத் தொடர்ந்து நேற்று மாலை வரை அப்பகுதிகளில் கடும் குண்டுவீச்சு இடம்பெற்றது 4பொம்மர்கள் தாக்குதலில் ஈடுபட்டன குண்டுவீச்சு நேற்று இரவு வரை நீடித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை வெற்றிலைக் கேணி - கட்டைக்காடு பகுதி கடலில் இருந்து பீரங்கிப் படகுகள் கடும் ஆட்லறி தாக்குதலை மேற்கொண்டன,

இதனால் கொம்படி - ஊரியான் பாதையூடாக போக்குவரவு தடைப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 10, 07

## மட்டக்களப்பு கண்ணிவெடி

## 12 படையினர் படுகாயம்

மட்டக்களப்பில் நேற்று நடைபெற்ற கண்ணிவெடித் தாக்குதலில் 12 படையினர் படுகாயமடைந்ததாக கூட்டுப்படைத்தலைமையகம் அறிவித்தது,

மட்டக்களப்பு வவுணதீவுப் பகுதியில் நடைபெற்ற இக் கண்ணிவெடித்தாக்குதலில் சிக்கிய இராணுவ வாகனம் சேதமடைந்து விட்டதாகவும் 12 படையினர் காயமடைந்த நிலையில் மட்டக்களப்பு. அம்பாறை ஆஸ்பத்திரிகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

## மண்டைதீவு படையினர் குருநகர் நோக்கி வேட்டுகள்

நேற்று முன்தினம் நள்ளிரவு 12 30 மணியளவில் மண்டைதீவில் உள்ள இராணுவம் குருநகரை நோக்கி துப்பாக்கி வேட்டுக்களை பலதடவை தீர்த்தது

இதனால் குருநகர் பகுதி மக்கள் நித்திரையிலிருந்து எழுந்து பாதுகாப்பாக அருகிலுள்ள பாடசாலைகளை நோக்கி சென்றதைக் காணக் கூடியதாக இருந்தது இராணுவத்தினரை நோக்கியும் துப்

—06 ஆம் பக்கம் பார்க்க

★ ஆனையிறவுப் பகுதியில் ஒரு வாரத்தில் இரண்டாவது தாக்குதல்

# தட்டுவன்கொட்டி தாக்குதலில் 10படையினர்பலி; 7 அரண் அழிப்பு

ஆனையிறவு தட்டுவன் கொட்டிப்பகுதியில் அமைந்திருந்த ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் காவலரண்கள் மீது நேற்று அதிகாலை 3,10 மணியளவில் விடுதலைப்புலிகள் அதிரடித் தாக்குதலை மேற்கொண்டனர்.

இத்தாக்குதலில் 7 காவலரண்கள் அழிந்தன, 10 படையினர் பலியாகினர் இவர்களிடமிருந்து பல ஆயுதங்களையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்

ஆனையிறவுப் பகுதியில் கடந்த ஒரு வாரத்தில் நடைபெற்ற இரண்டாவது தாக்குதல் இது என்பது குறிப்பிடத்தக்கது. (07-08-10-16)

## புலிகள் வசமான ஆயுதங்கள்

தட்டுவன்கொட்டி காவலரண்களிலிருந்து புலிகளினால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

- ☐ ஆர் பி ஜி - 01
- ☐ ஆர் பி ஜி ஷெல் - 05
- ☐ ஆர் பி ஜி புரப்லர் - 01
- ☐ ஏ. கே. எல். எம் ஜி - 01
- ☐ ரம் மகஸீன் - 01
- ☐ லிங் - 575
- ☐ ஜி 3 ஏ 3 - 01
- ☐ ஜி 3 மகஸீன் - 04
- ☐ ரி-56 துப்பாக்கிகள் - 06
- ☐ நேட்டோ ரவைகள் - 280
- ☐ ஏ. கே மகஸீன் - 20
- ☐ ஐ. எம் ரவைகள் - 2750

மற்றும் சில இராணுவச்சரதனங்கள்

## துப்பாக்கியை தூசாக்கும் 'எயிட்ஸ்' பயங்கரம்!

இதுவரை காலமும் கொள்ளையர்கள் கொள்ளை அடிப்பதற்கு துப்பாக்கி போன்ற ஆயுதங்களையே பயன்படுத்தி வந்தனர்.

ஆனால் அண்மையில் நியூபெட்போர்ட் என்ற இடத்தில் ஒரு கொள்ளைக்காரன் ஒரு புதுவித ஆயுதத்தைக் காட்டி, ஒரு வங்கி, ஒரு பெற்றோல் ஷெட், ஒரு பசும் பால் சேர்க்கும் நிலையம் ஆகிய மூன்று இடங்களிலும் வெற்றிகரமாக தனது கைவரிசையைக் காட்டியுள்ளான்,

அவன் பாவித்ததாக கூறப்படும் அந்த அபாயகரமான ஆயுதம், ஊசி மருந்து ஏற்றப் பாவிக்கும் ஒரு கருவியே! (SYRNGE இவன் இதனைக் காட்டி அதனுள் உள்ள இரத்தத்தில் 'எயிட்ஸ்' (AIDS) நோய்க் கிருமிகள் கலக்கப்பட்டிருப்பதாக பயமுறுத்தி ஏதாவது எதிர்ப்பு தெரிவித்தால் 'சிறிஞ்சில்' உள்ள இரத்தம் அவர்கள் மேல் பாய்ச்சப்படும் என்று எச்சரித்து தனது காரியத்தை இலகுவாகச் சாதித்துள்ளான். (16)

★தேர்தல்களில் முறைகேடு உருவாகக் காரணமான

# முன்னுரிமை வாக்குப் பதிவை நீக்கிவிட அரசுக்கு சிபார்சு!

பொதுத் தேர்தல்களில் தற்பொழுது நடைமுறையில் உள்ள முன்னுரிமை வாக்கு முறையை நீக்கிவிடுமாறு தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி. சில்வா அரசுக்கு சிபார்சு செய்துள்ளார்,

இந்த முன்னுரிமை வாக்கு முறையினால் பொதுத் தேர்தல்களில் குழப்பங்கள் ஏற்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்

கடந்த 1989 ஆண்டு பொதுத் தேர்தலில் துஷ்பிரயோகங்கள். துப்பாக்கி முனையில் வாக்களித்தல் போன்ற சம்பவங்கள் ஏற்பட்டு ஒரு குழப்பமான நிலை சில பகுதிகளில் ஏற்பட்டிருந்ததை சுட்டிக்காட்டியுள்ள தேர்தல் ஆணையாளர் இப்படியான ஒரு நிலை உருவாக இந்த முன்னுரிமை வாக்குமுறையே காரணமாக இருந்ததாகவும் தெரிவித்துள்ளார்

இது குறித்து தேர்தல் ஆணையாளரால் அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கையில் கட்சிகளும், வேட்பாளர்களும் தமது முன்னுரிமை வாக்கை அதிகரித்துக் கொள்வதற்காக தேர்தல் கடமைகளில் தலையிடுவது போன்ற சம்பவங்களை இம் முறையை நீக்கி விடுவதன் மூலம் தவிர்த்துக்கொள்ளலாமெனவும் சிபார்சு செய்துள்ளார்.

# இந்தியாவின் அதி நவீன வேவு விமானங்கள் அவுஸ்திரேலியாவரை கண்காணிப்பு பணியில்!

சென்னையிலிருந்து மேற்கே 80 கிலோ மீட்டர்கள் தொலைவிலுள்ள அரக்கோணத்தில் தென் கிழக்காசியாவிலேயே மிகப்பெரிய 'ஐ என் எஸ். ராஜாஜி' என்னும் கடற்படை விமானத்தளத்தை இந்திய ஜனாதிபதி நேற்று திறந்து வைத்தார்,

110 கோடி ரூபா செலவில் கட்டப்பட்டுள்ள இந்த விமானத்தளத்திலிருந்து 'ரியு - 42 எம்', '2 என். எஸ். ராகரி' வேவு விமானங்கள் இயங்கவுள்ளன:

இதன்மூலம் இந்து சமுத்திரத்தில் தூர கிழக்கேயுள்ள அவுஸ்திரேலியாவரை ஒரு பரந்த பிரதேசத்தில் இந்தியா கண்காணிப்பை மேற்கொள்ளும்.

'ரியு - 42 எம்' வேவு விமானம் இந்த அரக்கோணம் தளத்திலிருந்து புறப்பட்டு அவுஸ்திரேலியாவின் முனையைத்தொட்டுவிட்டு எங்குமே தரித்துநிற்காமல் திரும்பி அரக்கோணத்திற்கு வரக்கூடிய சக்தி கொண்டது.

9600 கிலோ மீட்டர்கள், தொடர்ச்சியாக 10 மணித்தியாலங்கள் வரை பறக்கக் கூடிய, நவீன வேவு கருவிகளைக் கொண்டது இந்த விமானம்.

ஆறு கரையோர நாடுகளை கொண்ட பரந்த கடற்பகுதி இங்குள்ளது. இந்த நாடுகள் அனைத்துமே நட்புறவாக இல்லை, அத்துடன் இக் கடற் பகுதியிலும் கரையோரப் பகுதியிலும் பெற்றோல் நிலவாயு வளங்களும் உண்டு.

இதனால் அரக்கோணம் தளம் இந்தியாவின் பாதுகாப்புக்கு மிக முக்கியமானதொன்றாகக் கருதப்படுகின்றது.

## சாதாரணதர பரீட்சை முடிவுகள் இம்மாத இறுதியில் வெளியாகும்

கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சை முடிவுகள் இம் மாத முடிவில் வெளியிடப்படவுள்ளதாக பரீட்சை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இப் பரீட்சைக்கு நாடு முழுவதிலும் சுமார் ஐந்தரை இலட்சம் பரீட்சார்த்திகள் தோற்றியிருந்தனர்,

விடைத்தாள்களை திருத்தும் வேலைகள் ஏற்கனவே முடிவுற்ற போதிலும், புள்ளிகளைப் பதியும் அலுவலக வேலைகள் முடிவுறாததினாலேயே பெறுபேறுகளை வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது,

## ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைகளை கணக்கிட நடவடிக்கை!

வறுமை நிவாரண உணவு முத்திரை வேலைத்திட்டத்தில் குழந்தைகளுக்கான பாலுணவு இலவசமாக வழங்குகின்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன

இதனால், வறுமை நிவாரண உணவு முத்திரை பெறும் குடும்பங்களில் உள்ள ஒரு வயதுக்குக் குறைந்த குழந்தைகளின் எண்ணிக்கையை கணக்கிடுவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த வகையில், யாழ். மாவட்டத்திலுள்ள வறுமை நிவாரணம் பெறும் குடும்பங்களிலுள்ள குழந்தைகளின் எண்ணிக்கையை கணக்கிட்டு உடன் அறிவிக்குமாறு யாழ். அரச அதிபரையும் சகல பிராந்திய மேலதிக அரசாங்க அதிபர்களையும் கொழும்பு வறுமை நிவாரண ஆணையாளர் பணித்துள்ளார். (25)

## 2 இலட்சம் ஹெக்டயர் தேயிலைச் செடிகள் கருகி நாசம்

மலைநாட்டுப் பகுதியிலுள்ள தேயிலைச் செடிகள் மஞ்சள் நிறமாக மாற ஆரம்பித்துள்ளன.

தற்பொழுது கடும் வறட்சி தொடர்வதனால் வெகு விரைவில் தேயிலைச் செடிகள் கருகி இலங்கையின் பொருளாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டு விடுமென விஞ்ஞானிகள் அச்சம் தெரிவித்துள்ளனர்,

இந்த வறட்சியினால் கூடுதலான தேயிலையைத் தரக்கூடிய தேயிலைச் செடிகள் பெரிதும் பாதிக்கப்படும்.

இரண்டு இலட்சம் ஹெக்டயரிலுள்ள உயர்இனத் தேயிலைச் செடிகள் இதனால் முற்றாகப் பாதிக்கப்பட்டு விட்டன,

நன்கு வளர்ந்த உயர் இன தேயிலைச் செடிக்கு தினமும் 4 லீட்டர் நீரும் இளம்செடிக்கு இரண்டு லீட்டர் நீரும் தேவை. ஆனால் இரத்தினபுரி தவிர்ந்த மலைநாட்டுப் பகுதியில் கடந்த 40 தினங்களாக மழை பெய்யவில்லை, இதனால் என்றும் செழிப்பான நுவரெலியாப் பகுதி வறண்டு காணப்படுகிறது.

## பாடசாலை முதலாந் தவணை ஏப்ரல் 10வரை நீடிப்பு!

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் முதலாந் தவணைக்கான பாடசாலை நாள்கள் ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முதலாந் தவணைக்கான பரீட்சைகள் இம்மாதம் 28 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன. (18)

## மொரீசியஸ் இன்று முதல் குடியரசு நாடாகிறது!

அதிகளவான தமிழர்கள் வசிக்கும் மொரீசியஸ் இன்று முதல் குடியரசு நாடாக மாறுகிறது.

இதன் பொருட்டு இன்று மொரீசியஸில் நடைபெறவுள்ள தேசிய வைபவத்தில் இந்தியப்பிரதமர் நரசிம்மராவ் விசேட அதிதியாகக் கலந்து கொள்ளவுள்ளார்.

மொரீசியஸ குடியரசு நாடாக மாறுகின்ற போதிலும் 50 நாடுகளைக் கொண்ட காமன்வெல்த் அமைப்பில் அது தொடர்ந்தும் அங்கம் வகிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

## காலியில் சட்டத்தரணியைத் தாக்கிய பொலிஸ் அதிகாரிக்கு இடமாற்றம்!

காலியைச்சேர்ந்த சட்டத்தரணி ஒருவர் தாக்கப்பட்டது தொடர்பாக உடுகம பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் காமினி இஹலவல இடமாற்றப்பட்டுள்ளார்.

கைதானவர்கள் சிலரை பிணையில் விடுவிக்க இந்தச் சட்டத்தரணி உடுகம பொலிஸ் நிலையம் போயிருந்தபோதே இவ்வாறு தாக்கப்பட்டு பின்னர் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

நாகொட பிரதேச சபையின் தலைவரான இந்த சட்டத்தரணி ஒரு சுதந்திரக் கட்சி ஆதரவாளர் என்பதும் இவர் கைது செய்யப்பட்டதை ஆட்சேபித்து காலிப் பகுதி சட்டத்தரணிகள் நீதிமன்றத்தை ஒருநாள் பகிஷ்கரித்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## கரபந்தாட்ட விரிவுரைகள்

யாழ். கரபந்தாட்ட சம்மேளனம் நடத்தும் புதுமுக கரபந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான விரிவுரைவகுப்புக்களின் நான்காவது தொடர் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் காலை 9 30 மணிக்கு நடைபெறவுள்ளதாகச் சம்மேளன உப-காரியதரிசி வி. வைரமுத்து அறிவித்துள்ளார்.

## மெய்வல்லுநர் போட்டி

கைதடி சேதுகாவலர் வித்தியாலய இல்லமெய்வல்லுநர் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் நடைபெறவுள்ளது.

உதவிக்கல்விப்பணிப்பாளர் இ.கணேசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளுவார்,

## மாஸ்கோவில் கடும் வறுமை; பூனை, நாய்கள் உணவாகின்றன!

வறுமையில் வாடும் மாஸ்கோ வாசிகள் பூனைகளையும், நாய்களையும் உணவாகக் கொள்கின்றனர், ரஷ்ய சுகாதார அதிகாரிகளினால் இதனைத் தடுக்க முடியவில்லை என்று 'சிசின்' என்ற ரஷ்ய இதழ் குறிப்பிட்டுள்ளது,

மாஸ்கோவில் இப்போது பூனை, நாய் மற்றும் விலங்குகளின் இறைச்சியை மக்கள் விற்பனை செய்வதைக் காணக்கூடியதாகவுள்ளது வீதியில் விற்கப்படும் வழமையான உணவுப் பொருள்களைப் பொறுத்தவரையிலும் அங்கு எந்தவித தரக்கட்டுப்பாடும் கடைப்பிடிக்கப்படுவதில்லை,

மத்திய மாஸ்கோ வீதிகளில் மக்கள் தம்மிடமிருக்கும் உடுபிடவைகள், வீட்டுப்பாவனைப் பொருள்கள் ஆகியவற்றை விற்பதற்கு கியூவில் நிற்பதைக் காணக்கூடியதாகவுள்ளது,

## மாவல்லரசாக அமெரிக்கா: உள்ளுக்குள்ளேயே எதிர்ப்பு

உலகின் ஒரேயொரு மாவல்லரசு நாடாக அமெரிக்கா தொடர்ந்தும் இருந்து வர எடுக்கப்படும் முயற்சிகளை அந்நாட்டின் பல தலைவர்கள் கண்டித்துள்ளனர்,

அந்நாட்டின் பாதுகாப்பமைச்சகத்தின் இரகசிய ஆவணமொன்றில் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ள சில ஷரத்துக்கள் அமெரிக்கா தொடர்ந்தும் உலகின் ஒரேயொரு மாவல்லரசாக திகழ்வதைஉறுதிப்படுத்தும்வகையில் அமைந்துள்ளதாகவும் அத்தலைவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அதிபர் புஷ்ஷின் குடியரசுக் கட்சி வேட்பாளர்களும் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.


## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ்கிளை தலைமையலுவலகம்

## தையல் பயிற்சி ஆசிரியர்

பளை, மருதங்கேணி, ஊர்காவற்றுறை, வேலணை, நெடுந்தீவு, உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கான மேற்படி பதவிக்கு விண்ணப்பங்கள் தகைமையும் அநுபவமும் உள்ளோரிடமிருந்து 17 03 92 வரை எம்மால் ஏற்றுக் கொள்ளப்படும். 18 03 92 (பிற்பகல் 2.00 மணிக்கு) எமது பணிமனையில் நேர்முகப் பரீட்சைக்கும் செய்முறைப் பரீட்சைக்கும் சமுகம் தரவும்.

73, கண்டி வீதி.
யாழ்ப்பாணம்
10. 03. 92.

ச. சிவானந்தராசா
கௌரவ செயலாளர்
03029

## 'பாலம்' பணியகத்தலைவர் சிங்கராயர் அடிகளார் தகவல்

# தமிழ்ப்பகுதிகளில் படையினரின் மனிதஉரிமை மீறல்களை

# நிதிதரும் நாடுகளின் அழுத்தத்தினால் தடுக்க முயற்சி

(கிறிஸ்ரி ரஞ்சன்)

இலங்கை இராணுவத்தினர் தமிழ்ப்பகுதிகளில் மனித உரிமை மீறல் சம்பவங்களில் ஈடுபடுவதை, இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மூலம் தடுப்பதற்குத் தற்பொழுது முயற்சிகள் எடுக்கப்பட்டுவருகின்றன.

'பாலம்' பொதுப்பணி மன்றத்தின் தலைவர் அருட்திரு. ஆபரணம் சிங்கராயர் (அ.ம.தி) அடிகளார் இந்த முயற்சியில் தற்பொழுது ஈடுபட்டுவருகிறார்.

இதுபற்றி அருட்திரு சிங்கராயர் அடிகளாரிடம் கேட்டபொழுது 'தமிழ்ப்பகுதிகளில் அரசபடையினர் மேற்கொள்ளும் மனித உரிமை மீறல் சம்பவங்களைப் பற்றிய விவரங்களைத் திரட்டித் தொகுத்து அவற்றை அறிக்கைகளாக நாம் சர்வதேச மன்னிப்புச் சபைக்கும், இலங்கைக்கு உதவி வழங்கும் முக்கிய பன்னிரண்டு நாடுகளுக்கும் மாதாமாதம் அனுப்பி வருகின்றோம். அதன் அடிப்படையில் அரசபடைகள் மனித உரிமை மீறல் தொடரா வண்ணம் இலங்கை அரசை நிர்ப்பந்திக்க வேண்டுமெனவும் வலியுறுத்தி வருகின்றோம். இதனால் அரசு பொருளாதார ரீதியுள்ள அழுத்தமொன்றுக்கு உட்படுமென எதிர்பார்க்கிறோம்' என அவர் விளக்கமளித்தார்.

தொடர்ந்து 'பாலம்' பணிமனையின் ஏனைய பணி பற்றியும் அவர் எமக்கு விவரித்தார்.

### துன்பப் படுவோருக்கு பாலம் வழிகாட்டும்

'துன்பப்படும் மக்கள் எம் மதத்தவராயிருப்பினும் அவர்கள் பாலத்துடன் தொடர்பு கொண்டால் அவர்களின் பிரச்சினை தீர 'பாலம்' வழிகாட்டும்.

### இணைப்பும் முக்கிய பணி

நிவாரணம் பெறுதல், நோயாளர் பராமரிப்பு மற்றும் திணைக்களங்கள், அமைப்புக்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல் போன்ற சேவைகளையும் 'பாலம்' முக்கிய பணிகளாக மேற்கொண்டுவருகிறது.

### 50 தொண்டர்கள் முழுநேரசேவையில்

பாலம் பணிமனையில் தற்பொழுது சுமார் 50 முழுநேரத் தொண்டர்கள் சேவை புரிந்து வருகின்றனர். இவர்களுக்கு உளவியல் ரீதியாக நோயாளர்களைப் பராமரிப்பது சம்பந்தமாக ஆரம்பத்தில் ஒருமாத காலப்பயிற்சி வழங்கப்படுகிறது.

பாலத்தின்' அரவணைக்கும் கரங்கள்' தொண்டர்களின் சேவையை வைத்தியசாலை நிர்வாகமும், நோயாளர்களும் பாராட்டியுள்ளனர். இதுவரை சுமார் 200 நோயாளர்களுக்கு இவர்கள் பராமரித்துச் சேவை வழங்கியுள்ளனர்.

### தொற்றுநோய் அபாயமுண்டு

மூளைக்காய்ச்சல் நோயினால் பாதிக்கப்பட்ட நோயாளர்களைப் பராமரிக்கும் சேவையிலீடுபட்ட பாலம் தொண்டர்களில் அறுவர் கடந்தவாரம் அந் நோய்த் தொற்றுக்கு ஆளாகியிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

நோயாளர் பராமரிப்பில் 'பாலம்' தொண்டர்கள் ஈடுபடத் தொடங்கியதையடுத்து வைத்தியசாலையில் நோயாளர்களின் உடமைகள் திருடப்படும் சம்பவங்கள் வெகுவாகக் குறைந்துவிட்டன.

### முதியோர்சேவையும் கிடைக்கும்

பிள்ளைகளின் பிரிவால் தவிக்கும் வயது முதிர்ந்த பெற்றோரைத் தங்கவைத்துப் பராமரித்துச் சமுதாயத்திற்கு அவர்களின் சேவையைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் யாழ், குடாவில் உதவி அரச அதிபர் பிரிவு ரீதியாக முதியோர் இல்லங்களைத் திறக்க 'பாலம்' ஆலோசித்து வருகிறது.

### மதவேறுபாடு பாலத்தில் இல்லை

இந்தப் பணியகத்தின் தலைவராகக் கத்தோலிக்கக் குருவும் உப-தலைவராக இந்துக்குரு ஒருவரும் பணிபுரிந்து வருகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

---

## அரச அலுவலகங்களில் புகை பிடிப்பதை தடுக்க சபையில் பிரேரணை!

அரச அலுவலகங்களில் புகைபிடிப்பதைத் தடைசெய்யுமாறு கோரும் தனிநபர் பிரேரணை ஒன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அத்துடன் அரச மற்றும் தனியார் பேருந்துகளிலும், திரைப்பட அரங்குகளிலும் புகைப்பிடிப்பதை கண்டிப்பாகத் தடுக்க வேண்டுமெனவும் இந்தப் பிரேரணையில் கோரப்பட்டுள்ளது.

மேலும் சிகரெட், மதுபானம் போன்றவற்றுக்கான சகல விளம்பரங்களையும் கட்டுப்படுத்த வேண்டுமெனவும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள இந்தத் தனிநபர் பிரேரணையில் கோரப்பட்டுள்ளது.

விரைவில் இப்பிரேரணை சபையில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளதாகவும் அறியப்படுகின்றது.

---

## பயிலுநர் ஆசிரியர்கள் நியமனம் பெற்ற பாடங்களை மாற்றமுடியாது

உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் இருந்த வெற்றிடங்களுக்கு ஏற்ப பாடரீதியாக நியமிக்கப்பட்ட பயிலுநர் ஆசிரியர்கள் எத்தகைய பாடங்களை கற்பிப்பதற்காக நியமிக்கப்பட்டார்களோ அப்பாடங்களை கற்பிப்பதை விடுத்து வேறு பாடங்களை கற்பிக்கும் வகையில் தமது நியமனத்தை மாற்றியமைக்க முடியாது என கல்விச்சேவைக் குழு அறிவித்துள்ளது.

1987 ஆம் ஆண்டில் தொடக்கப்பட்ட ஆரம்ப ஆசிரியர்களை ஆட்சேர்க்கும் போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் நியமிக்கப்பட்ட ஆரம்ப பயிலுநர் ஆசிரியர்கள் தொடர்பாகவும் இந்நடைமுறை பின்பற்றப்பட வேண்டும் எனவும் கல்விச் சேவை ஆணைக்குழு கேட்டுள்ளது. (15)

### இன்று கூட்டம்

இன்று வியாழக்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபை மண்டபத்தில் யாழ். மாவட்ட பலநோ.கூ.சங்க தலைவர்கள், பொதுமுகாமையாளர்களுக்கான கூட்டம் நடைபெறவுள்ளதாக கூட்டுறவுப் பிரிவு அறிவித்துள்ளது.

---

## சுபா, சிவராசனுக்கு நினைவாலயம் அமைக்க முயற்சி

பெங்களூரில் சிவராசனும் சுபாவும் மரணமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டவீட்டை நினைவாலயமாக மாற்ற முயற்சியெடுக்கப் பட்டிருந்ததாகத் தமிழகச் செய்தியொன்று தெரிவிக்கின்றது.

சம்பவம் நடந்த ஊரவர்களும், அனுதாபிகளுமே இம் முயற்சியை மேற்கொண்டதாகவும் அச் செய்தி தெரிவிக்கின்றது.

இது குறித்து தகவலறிந்த பொலிஸார் இம் முயற்சியைத் தடுப்பதற்காக, அந்த வீட்டைச் சுவீகரித்து அதனைப் புறக்காவல் நிலையமாக மாற்றிவிட்டதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

---

## பெருந்தோட்டங்களின் உரிமை தொடர்ந்தும் அரசிடமே -ஜனாதிபதி

பெருந்தோட்டங்கள் தொடர்ந்தும் அரச உடமையாகவே இருக்குமென ஜனாதிபதி பிரேமதாஸ அறிவித்துள்ளார்.

'தற்பொழுது தோட்டங்களின் நிர்வாகத்தில் மட்டுமே மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன, அவற்றின் உரிமையில் அல்ல.'

'தொடர்ந்து நஷ்டத்தில் இயங்கியதால் மூடப்பட வேண்டிய நிலையைத் தவிர்க்கவே இந்த நிர்வாக மாற்றத்தை ஏற்படுத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.'

இந்த நிர்வாக மாற்றத்தினால் தோட்டத் தொழிலாளர்கள் எவரும் வேலை நீக்கம் செய்யப்படமாட்டார்கள் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

---

## உதைபந்தாட்ட லீக் போட்டிகள்

யாழ். உதைபந்தாட்ட லீக் நடாத்தும் லீக் முறையிலான உதைபந்தாட்டப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற போட்டிகளில் 'பி' பிரிவில் கிறீன் பீல்ட் விளையாட்டுக் கழக அணியை நாவாந்துறை சென்மேரிஸ் அணி 2:0 கோல்கள் கணக்கில் தோற்கடித்தது.

'ஏ' பிரிவு ஆட்டத்தில் சென் அந்தனிஸ் அணி அதனை எதிர்த்து ஆடிய அரியாலை அணியை 3:2 கோல்கள் கணக்கில் வென்றது.

14 ஆம் திகதி இடம்பெறவுள்ள ஆட்டத்தில் 'பி' பிரிவில் பாடும்மீன் அணியை எதிர்த்து சென். பிலிப்ஸ் அணியும், ஏ. பிரிவில் பொற்பதி அணியை எதிர்த்து கிறீன் பீல்ட் அணியும் ஆடவுள்ளன. (16)

---

## அரச ஊழியர்களுக்கு வைத்தியச்செலவுகள் கிடைக்கும்

தற்பொழுது நடைமுறையிலுள்ள அரச ஊழியர்களுக்கான சுகாதார காப்புறுதித் திட்டம் மேலும் விஸ்தரிக்கப்படவுள்ளதாக காப்புறுதிக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

இதன்படி ஏற்கனவே அமுலில் உள்ள சத்திரசிகிச்சைகளுக்கான செலவுக் கொடுப்பனவுகளுடன் ஏனைய வைத்திய செலவுகளும் அரச ஊழியர்களுக்கு வழங்கப்படவுள்ளன.

---

## கல்வி நிருவாக சேவை போட்டிப்பரீட்சை 22 ஆம் திகதி

இலங்கைக் கல்வி நிருவாக சேவையின் மூன்றாம் வகுப்புக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை (1991,II ஆம் பகுதி) இம் மாதம் 22 ஆம் திகதி நடைபெறவுள்ளதாகவும், அனுமதி அட்டைகளும் நேர சூசிகையும் அஞ்சல்செய்யப்பட்டுவிட்டதாகவும் பரீட்சை ஆணையாளர் ஆதர் வெதமுல்ல அறிவித்துள்ளார்.

இப் பரீட்சை இம் மாதம் 7 ஆம் திகதி ஆரம்பமாகவிருந்து பின்னர் ஒத்திவைக்கப்பட்டது.

---

## போலி விஸா வழங்கிய நெதர்லாந்து அதிகாரி விசாரணையில்

கொழும்பிலுள்ள நெதர்லாந்து தூதுவராலய அதிகாரி ஒருவர் மோசடிக் குற்றச்சாட்டின் பேரில் பொலிஸ் விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்.

இவ் அதிகாரி 6 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாவைப் பெற்றுக்கொண்டு போலி ஒப்பத்துடன் கூடிய விஸாவை வழங்கியுள்ளமை தற்பொழுது விசாரணைகளின் மூலம் அறிய வந்துள்ளது.

இந்த உத்தியோகத்தர், இலங்கையர் இருவருக்குக் கொடுத்த விஸாக்கள் உண்மையானவையல்ல என்று நெதர்லாந்தில் கண்டு பிடிக்கப்பட்டதின் விளைவாக அந்த இலங்கையர் இருவரும் இலங்கைக்குத் திருப்பியனுப்பப் பட்டிருந்தனர்.

இதனைத் தொடர்ந்து மோசடி தடுப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் விஸா வழங்கும் அதிகாரியின் செயலாளராகப் பணிபுரிந்து வரும் சந்தேக நபர் 17 இலங்கையர்களிடம் இருந்து தலா 40 ஆயிரம் ரூபா பெற்றுக்கொண்டு அதிகாரியின் கையொப்பத்தைத்தானே வைத்து விஸாக்களை வழங்கியுள்ளமை அம்பலத்திற்கு வந்துள்ளதாம். (16)

---

## ஏப்ரல உயர்தர விசேட பரீட்சை ஒழுங்குகள் துரிதம்

கடந்த ஆகஸ்ட் மாதம் வடக்கில் தடைப்பட்ட க.பொ.த. உயர்தரப் பரீட்சையை எதிர்வரும் ஏப்ரல் மாதம் விசேட பரீட்சையாக நடாத்துவதற்கு வேண்டிய ஒழுங்குகள் தடையின்றி துரிதமாக நடந்து வருவதாக பரீட்சைத் திணைக்கள ஆணையாளர் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

இப் பரீட்சைக்கு இருபதினாயிரம் பரீட்சார்த்திகள் தோற்றுவர் எனவும் அவர் தெரிவித்தார்.

---

## நிதிக் கம்பனிக்கு அனுமதி

இலங்கை வங்கி ஆரம்பிக்கவுள்ள புதிய நிதிக்கம்பனிக்கு மத்திய வங்கி அனுமதியளித்துள்ளது.

விரைவில் இது செயற்படவுள்ளதாக வங்கி உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## பாலைதீவு கடலில் வைத்து மீனவர் மீது படையினர் தாக்கு

பாலைதீவுக்கடலில் திங்களன்று மாலை மீன்பிடிக்கச் சென்று நேற்றுவரை கரைக்கு வந்து சேராதிருந்த குருநகர் மீனவரின் பிளாஸ்ரிக்படகு மீன்பிடிக்கச்சென்ற தொழிலாளிகளுடன் நேற்றையதினம் காலை குருநகரை வந்து சேர்ந்தது

பாலைதீவுக்கடலில் ஸ்ரீலங்கா கடற்படை விசைப்படகு தம்மைக் கைதுசெய்து கடற்படை படகில் ஏற்றியதாகவும் அடித்து சித்திரவதைப் படுத்தியதன் பின்னர் இனி இப்பக்கம் வரக்கூடாது என துரத்திவிட்டனர் எனவும் தப்பிவந்த மீனவர்கள் தெரிவித்தனர் 15

## மலையகத்தில் மீண்டும் தமிழ் இளைஞர்கள் கைது

மலையகத்தில் தமிழ் இளைஞர்கள் கைதாவது மீண்டும் ஆரம்பமாகியுள்ளது,

நுவரெலியாவில் வாவிக்கதோட்டத்தில் இரு தமிழ் இளைஞர்கள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

இதேபோல பசறையிலும் ஒரு தமிழ் இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளார்.

பண்டாரவளையிலும் பல லேகட்டுவ பகுதியில ஐந்து இளைஞர்கள் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர்.

பதுளையில் ஏற்கனவே கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள மூன்று பெண்களும் கொழும்புக்கு மாற்றபபட்டுள்ளனர்,

## நல்லூர் ப. நோ. கூ. கிளையில் உணவுப் பொருள் திருட்டு

நல்லூர் பல நோ. கூ. சங்கங்களின் திருநெல்வேலி கிளை 18 நேற்று முன்தினமிரவு உடைக்கப்பட்டு பல ஆயிரம் ரூபா பெறுமதியான உணவுப் பொருள்கள் களவாடப்பட்டுள்ளன.

அரிசி, சவர்க்காரம், சீனி, பருப்பு என்பன திருடர்களால் களவாடப்பட்டுள்ளன.

இத்திருட்டுச் சம்பவம் குறித்து மேற்படி சங்கத்தின் முகாமையாளர் தமிழீழ காவல் துறையினரிடம் முறையிட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது. 47

## தங்கப்பாளங்கள் கடத்த முயன்ற இராணுவத்தினர் மீது விசாரணை முடிவுற்றது

ஆயுதப்படையினரால் புரியப்பட்ட ஊழல்கள் மற்றும் ஒழுங்கீனங்கள் ஆகியவற்றை விசாரிப்பதற்கு நியமிக்கப்பட்ட இராணுவ நீதிமன்றம் தனது விசாரணையைமுடித்து விட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சில ஆயுதப்படையினர் எண்பது லட்சம் ரூபா பெறுமதியான தங்கபாளங்கள் மற்றும் கடத்தல் பொருள்களைக் கடத்த முயன்றதாக பாதுகாப்பு வட்டாரத்தைச்சேர்ந்த உயர் அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆயுதப்படையினரின் ஊழல்களையும், ஒழுங்கீனங்களையும் விசாரிப்பதற்கு மேலும் இரண்டு இராணுவ நீதிமன்றங்கள் ஸ்தாபிக்கப்படவுள்ளதாக அவ்வட்டாரங்கள் தெரிவித்தன,

அனுராதபுரத்தில் நடைபெற்ற டீசல் ஊழலையும் சட்டவிரோதமாக போக்குவரத்து அனுமதிப்பத்திரம் வழங்கிய விடயங்கள் பற்றியும் இந்த நீதிமன்றங்கள் விசாரணை நடத்தும் என மேலும் தெரிவிக்கப்படுகிறது

## குடிவரவு, புகையிரதசேவை விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

இலங்கை புகையிரத சேவையின் மத்தியதர தொழில்நுட்பசேவை ஆட்சேர்ப்பு போட்டிப்பரீட்சை மற்றும் குடிவரவு குடியகல்வு திணைக்கள அலுவலர்கள் ஆட்சேர்ப்பு ஆகியவை தொடர்பாக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன,

இவற்றுக்கு விண்ணப்பிப்போர் மேலதிக விவரங்களை யாழ் செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள வர்த்தமானியில் பார்வையிடலாம் என தெரிவிக்கப்படுகிறது. 47

## பர்மிய அகதிகள் குறித்து ஸ்ரீலங்காவும் கவலை!

பர்மாவுக்கும் பங்களாதேஷிற்கும் இடையில் எழுந்துள்ள எல்லைப்பூசலினால் பெருமளவு பர்மிய முஸ்லிம் அகதிகள் பங்களாதேஷின் அகதிகளாக இடம் பெயர்ந்துள்ளது குறித்து ஸ்ரீலங்கா அரசும் கவலை வெளியிட்டுள்ளது

இவ்வகதிகளுக்கு ஸ்ரீலங்கா தேயிலையை அன்பளிப்பாக வழங்கவுள்ளதாகவும்பங்களாதேஷ் சார்க் நாடு என்பதால் கவலை இரட்டிப்பதாகவும் ஸ்ரீ லங்காவின் வெளியுறவுச் செயலர் பெர்னாட் திலகரட்ன தெரிவித்துள்ளாரம்

பர்மா ஒரு பௌத்த நாடு என்பது இங்கு குறிப்பிடத்தக்கது

### லொறிகள்..

காங்கேசன்துறைக்கான அடுத்த வாகன அணி நாளை வெள்ளிக்கிழமை செல்லும் என தெரிவிக்கப்பட்டது. 47

### சினைப்பர் தாக்கு

நொச்சிமோட்டையில்நேற்று முன்தினம்சாலை புலிகள் குறி பார்த்து சுட்டதில் ஒரு இராணுவச் சிப்பாய் பலியானார்

### பிரிட்டிஷ் தேர்தல்

எதிர் வரும் ஏப்ரல் மாதம் 9 ஆம் திகதி பிரிட்டனில் பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளது. பிரதமர் ஜோன் மேஜர் இவ்வறிவிப்பை நேற்று வெளியிட்டார்

## ★ வாழப்பாடிக்கும் அமைச்சர் மரகதத்திற்கும் ஸ்ரீபெரம்புதூர் மைதானத்தை தெரிவு செய்தது குறித்து இழுபறி

ராஜீவ்காந்தி கொல்லப்பட்ட ஸ்ரீ பெரம்புதூர் மைதானம் பாதுகாப்பற்றது என நான் அறிந்திருந்தேன் பல பாதுகாப்பு அதிகாரிகளும் இது குறித்து என்னிடம் கூறினர் கடைசிநேரமானபடியால் என்னால் எதுவும்செய்ய முடியாது எனக்கூறிவிட்டேன் இந்த இடத்தை தெரிவுசெய்ய முக்கியகாரணமாக இருந்தவர் முன்னாள் மத்திய அமைச்சரான மரகதம் அம்மாளே

இவ்வாறு தமிழக காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி வர்மா விசாரணை கமிஷன் முன்னிலையில் சாட்சியமளிக்கையில் தெரிவித்துள்ளார்,

இது குறித்து கமிஷன் முன் சாட்சியமளித்த முன்னாள் அமைச்சர் திருமதி மரகதம் எம். பி கூட்டத்திற்கான ஸ்ரீ பெரம்புதூர் மைதானம் கட்சி பிரமுகர்கள் பொலிஸ் அதிகாரிகளுடன் கலந்து பேசியே தெரிவு செய்யப்பட்டது என்றார்

வாழப்பாடியுடன் இது தொடர்பாக நான் எந்தப் பேச்சும் வைக்கவில்லை எனவும் அவர் கூறினார்.

## மோசடிக்குற்றச்சாட்டு பிக்குவுக்கு விளக்கமறியல்

மோசடி குற்றச் சாட்டின் மீது இலவச பாலர் பாடசாலை அதிபரான புத்த பிக்கு ஒரு வரை இம் மாதம் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கோட்டை நீதவான் உத்தரவிட்டார்

இலவசபாடசாலைநடாத்த ஜப்பானில் இருந்த மதகுரு ஒருவரால் பல லட்சம் ரூபா இவருக்கு அனுப்பப்பட்டதாகவும் ஆனால் இவர் மாணவரிடமிருந்து பணம் பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது

இந்தப்பிக்கு அடிக்கடிவெளிநாடுகளுக்கு போய்வருபவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

### பஞ்சாப்பில் 17 பேர் கொலை

பஞ்சாப்பில் 17 கனிஷ்ட பொறியியலாளர்கள் சீக்கிய தீவிரவாதிகளினால் நேற்று சுட்டுக்கொல்லப்பட்டனர்

கட்டிட நிர்மாணப்பணியில் ஈடுபட்டிருந்த இவர்களது அலுவலகத்தினுள் நுழைந்த தீவிரவாதிகள் சீக்கியரல்லாத இவர்களை தனியாக நிற்க வைத்து சுட்டுக்கொன்றனர் பஞ்சாப் தேர்தலின் பின் நடந்த மிகப்பெரிய சம்பவம் இதுவாகும்

## அவுஸ்திரேலியாவை பாகிஸ்தான் முறியடித்தது

ஐந்தாவது உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டித் தொடரில் பாகிஸ்தானுக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் இடையில் இடம்பெற்ற போட்டியில் பாகிஸ்தான் அவுஸ்திரேலியாவை 48ஓட்டங்களால் முறியடித்தது

முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 50ஓவர்களில் 09 விக்கற்றுகளை இழந்து 220ஓட்டங்களைப் பெற்றது

அவுஸ்திரேலியா அதன்துடுப்பாட்டத்தில் 45.3 ஓவர்களில் சகல விக்கற்றுகளை இழந்து 172ஓட்டங்களைப் பெற்றது

இன்று இந்தியாவும் நியூசிலாந்தும் மற்றைய ஆட்டத்தில் இங்கிலாந்தும் தென் ஆபிரிக்காவும் மோதுகின்றன (16)

### வானொலி கிடைத்தது

கடந்த 9 ஆம் திகதி காங்கேசன் துறையில் பொருள்கள் ஏற்றிச் சென்ற லொறியிலிருந்து கழற்றி எடுக்கப்பட்ட வானொலி நேற்று அந்த லொறி உரிமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டது

களஞ்சியத்தில் உள்ள தொழிலாளி இதனைக்கழற்றி எடுத்ததாக விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது 07

## கடும் வெயில் காரணமாக யாழ். மருத்துவமனையில் நோயாளர் அதிகரிப்பு

குடாநாட்டில் தற்போது ஏற்பட்டிருக்கும் அகோர வெயில் வெப்பத்தினாலும் இரவில் வீசும் கடும்பனியினாலும் பலதரப்பட்ட நோய்களுக்குள்ளாகி யாழ் மருத்துவமனையில் தினமும் பல நோயாளிகள் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர்.

சிறியோர்கள் தொடக்கம் பெரியோர்கள் வரையில் ஆஸ்த்மா, வயிற்றுளைவு, நெருப்புக்காய்ச்சல், வயிற்றோட்டம், செங்கமாரி, மலேரியா நோய்கள் தற்போது தீவிரமாகப் பரவிவருகின்றன

இம்மாதம் பத்து நாள்களில் மட்டும் சிறுவர்கள் சிகிச்சை விடுதியில் 134 சிறுவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

116 பேர்வரையில் மேற்குறிப்பிட்டநோய்களாலும் 20பேருக்கு மேற்பட்டோர் வயிற்றோட்டநோயினாலும் பாதிக்கப்பட்டநிலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (07)

## தார் பீப்பா வெடித்து மூவர் காயம்

நேற்று நண்பகல் 11 மணியளவில் பண்டத்தரிப்பு பிரான் பற்றுப் பகுதியில் தாரிலிருந்து ஒயில் தயாரிக்க முயன்ற சிலர் தார் பீப்பாவை சூடேற்றியபோது தார்பீபா வெடித்ததில் ஒருவர் படுகாயமடைந்தார்,

இருவர் சிறு காயங்களுக்குள்ளானார்கள் இதனால் சிறிதுநேரம் அப்பகுதி முழுவதும் புகைமண்டலமாகக் காட்சியளித்தது பின்னர் பொதுமக்கள் சேர்ந்து தீயை அணைத்தனர்' 22

### மண்டைதீவு...

பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப் பட்டன

இராணுவத்தினரின் இந்நடவடிக்கை காரணமாக இப்பகுதியில் தொழில் செய்து கொண்டிருந்த மீனவர்களும் உடன் கரைக்கு திரும்பினர் என தெரிவிக்கப்படுகிறது. 15

### இரத்மலானை—

குறித்து எதுவும் தெளிவாக இல்லை என வெரித்தாஸ் வானொலி குறிப்பிட்டது,

### எப்ரக விமானமா?

சிதறிய விமானம் சீனாவிலிருந்துவாங்கப் பட்ட புதிய "F" ரக விமானமா அல்லது சீன "Y" ரக விமானமா என்பது குறித்தும் தெரியவரவில்லை.

### இராணுவம் மறுப்பு

இரத்மலானையில் நிறுத்தப்பட்டிருந்த விமானமே வெடித்து சிதறியதாக வெளிவந்த செய்தியை பாதுகாப்புப்படையினர் மறுத்துள்ளனர் இச்சம்பத்தில் எவரும் காயமடையவில்லை எனவும் பொலிஸ் தலைமையகம் அறிவித்தது

## கோமாரிக் கப்பல் வருகிறது

நாளை மறுதினம் பருத்தித்துறைக்கு வந்து சேருமென எதிர்பார்க்கப்படும் கோமாரி கப்பலில பின்வரும் பொருள்கள் வந்து சேருமெனத் தெரிகிறது

1400மெ. தொ அரிசி, 1200 மெ தொ மா, 200 மெ தொ சீனி, 182 மெ தொ கடலை /பருப்பு வகை, 88 மெ தொ பால் மா வகைகள், 15 மெ தொ தேயிலை, 25 மெ தொ திரிபோஷா, 07 மெ தொன் சவர்க்காரங்கள் என்பன

இவைதவிர டீசல், அடைமான அட்டைகள் ஆதார வைத்தியசாலைக்கும், சுகாதாரத்திணைக்களத்துக்கும் பலநோக்கு வங்கிக்கும் டீசல், பெற்றோல், மண்ணெண்ணெய், ஒயில் தபால் பொதிகளும் இலங்கை வங்கிக்குக் காசும் கொண்டுவரப்படவுள்ளன.

## எரிந்த கொட்டகைகளால் 1ல. 32ஆயிரம் ரூபா நட்டம்

புத்தூர் கலட்டியில் தீப்பிடித்து எரிந்து நாசமான அகதிகளின் மூன்று கொட்டகைகளினால் ஒருலட்சத்து 32 ஆயிரம் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது

இவை ஒப்பந்த அடிப்படையில் அமைக்கப்பட்டதாகவும் உரியமுறையில் பூர்த்திசெய்யப்படவில்லைஎனவும் பாதிக்கப்பட்ட அகதிகள் முன்னர் தெரிவித்தனர்

பாதிக்கப்பட்டவர்களுக்கு நேற்று முன்தினம் செஞ்சிலுவைச் சங்கம் உதவி வழங்கியது. (16)

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேற்)லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்கஸ்தூரியார் வீதி 'லக்ஷ்மிபில்டிங்'இல் உள்ள அச்சகத்தில் 12-03-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது